## ஆகஸ்ட்– 20 – திங்கள்

புனித பெர்னாந்து

**தாய் தந்தையை மதித்து நட. மேலும், உன்மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக மத். 19:19**

### முதல் வாசகம் : ஏசேக்கியல் 24 : 15 – 24

ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது."மானிடா! உன் கண்களுக்கு இன்பம் தருவதை உன்னிடமிருந்து ஒரே நொடியில் எடுத்துவிடப்போகிறேன். ஆனால் நீ புலம்பவோ, அழவோ, கண்ணீர் சிந்தவோ கூடாது.மெதுவாய்ப் பெருமூச்சுவிடு! இறந்தோர்க்காய்ப் புலம்பாதே! உன் தலைப்பாகையைக் கட்டிக்கொள்! காலில் மிதியடியை அணிந்துகொள்! உன் வாயை மூடிக்கொள்ளாதே! இழவு கொண்டாடுவோரின் உணவை உண்ணாதே!"நான் மக்களிடம் காலையில் உரையாடினேன். மாலையில் என் மனைவி இறந்துவிட்டாள். மறுநாள் காலையில் ஆண்டவர் கட்டளையிட்டதைச் செய்தேன்.அப்போது மக்கள் என்னிடம், "நீர் செய்வதன் பொருள் என்னவென்று எங்களுக்குச் சொல்லமாட்டீரோ?" என்று கேட்டனர்.எனவே, நான் அவர்களுக்குச் சொன்னது "ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டதுஇஸ்ரயேல் வீட்டாருக்குச் சொல் தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே. உங்கள் வலிமையின் பெருமையும், கண்களின் இன்பமும், இதயத்தின் விருப்பமுமாகிய என் தூயகத்தை நான் தீட்டுப்படுத்துவேன் நீங்கள் விட்டுச்சென்ற ஆண்மக்களும் பெண்மக்களும் வாளால் மடிவர்.நான் செய்தது போல் நீங்களும் செய்வீர்கள் நீங்களும் உங்கள் வாயை மூடிக்கொள்ள மாட்டீர்கள் இழவு கொண்டாடுவோரின் உணவை உண்ணவும் மாட்டீர்கள்.தலைப்பாகையை உங்கள் தலையில் வைத்திருப்பீர்கள். கால்களில் மிதியடிகள் இருக்கும். நீங்கள் புலம்பவோ அழவோ மாட்டீர்கள். ஆனால் உங்கள் குற்றப்பழி குறித்துத் தளர்வுற்று உங்களிடையே புலம்பிக் கொள்வீர்கள்.இவ்வாறு எசேக்கியேல் உங்களுக்கு ஓர் அடையாளமாய் இருப்பான். அவன் செய்ததுபோல் நீங்களும் செய்வீர்கள். இவை நடக்கையில் நானே தலைவராகிய ஆண்டவர் என அறிந்து கொள்வீர்கள்.

**பதில்பாடல் :** நீ உன்னை ஈன்ற பாறையைப் புறக்கணித்தாய்.

### நற்செய்தி : மத்தேயு 19 : 16 – 22

அக்காலத்தில் செல்வரான இளைஞர் ஒருவர் இயேசுவிடம் வந்து, "போதகரே, நிலை வாழ்வைப் பெற்றுக்கொள்வதற்கு நான் என்ன நன்மை செய்யவேண்டும்?" என்றுகேட்டார்.இயேசு அவரிடம், "நன்மையைப்பற்றி என்னை ஏன் கேட்கிறீர்? நல்லவர் ஒருவரே. நீர் வாழ்வடைய விரும்பினால் கட்டளைகளைக் கடைப்பிடியும்" என்றார். அவர், "எவற்றை?" என்றுகேட்டார். இயேசு, "கொலை செய்யாதே் விபசாரம் செய்யாதே் களவு செய்யாதே. பொய்ச்சான்று சொல்லாதே. தாய் தந்தையை மதித்துநட. மேலும், உன்மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக" என்று கூறினார்.அந்த இளைஞர் அவரிடம், "இவை அனைத்தையும் நான் கடைப்பிடித்துவந்துள்ளேன். இன்னும் என்னிடம் குறைபடுவது என்ன?" என்றுகேட்டார்.அதற்கு இயேசு, "நிறைவுள்ளவராக விரும்பினால் நீர்போய், உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" என்றார்.அவர் சொன்னதைக் கேட்ட அந்த இளைஞர் வருத்தத்தோடு சென்றுவிட்டார். ஏனெனில் அவருக்கு ஏராளமான சொத்து இருந்தது.

**தியானம்:** நாம் யார் தெரியுமா? என்று கேட்கும் மமதையும், எனது பெருமைஎன்ன? என்றுகேட்கும் சிறுமையும் எனது பலம் என்ன என்று தெரியுமா? என்று கேட்கும் பலயீனமும் வாழ்க்கைத் தத்துவத்தை வாழ்வின் இனிமையை இழந்த ஈரமானவர்கள் பேசும் மொழியாகும். அன்று கடவுளை மறந்துவிடாமல் வாழும்படி யூதாமக்களிடம் எச்சரிக்கும் முகமாகஎசாயா இறைவாக்கினரால் எடுத்துக்கூறும் அறிவுரையை இன்றைய முதல் வாசகத்தில் பார்க்கின்றோம். ஆனால் இன்று வளர்ச்சியடைந்த நாடுகளில் வாழும் பெரும்பாலானோர் நாகரீகம், கலாச்சாரம், விஞ்ஞான அறிவு போன்றவற்றினால் பாதிக்கப்பட்டு கடவுளை மறந்து வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதைஉண்போம்? எதைக் குடிப்போம்? நாளைக்கு மரிப்போம் என்ற எண்ணத்துடன் தீயோனில் சூழ்ச்சிக்குள் அகப்பட்டள்ளார்கள். இச்சைக்கென்று மட்டும் நாம் இறைவனில் நம்பிக்கை வைத்து வாழ்கின்றவர்களாக இருப்போமெனில் எல்லாமனிதர்களும் பரிதாபத்துக்குரியவர்கள் என்பதை இன்றைய நற்செய்திவாசகம் கூறுகின்றது. உன் உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு என்றவுடனேயே இளைஞர் வருத்தத்தோடு செல்வதை காண்கிறோம். இன்றைக்கு இருந்து நாளைக்கு எறியும் காட்டுமலர்களுக்கே எவ்வாறு அழகாக ஆண்டவர் உடுத்துகிறார் என்றால் எங்களுக்கு எவ்வளவு செய்வார் என்பதை பலர் எண்ணிப்பார்ப்பதில்லை. மலைகளும், பள்ளத்தாக்குகளுமே இப் பூமிக்குத் தேவை. மலைகள் மழையைத் தருகின்றன, பள்ளத்தாக்குகள் மழைத் தண்ணீரைச் சேகரிக்கின்றன. எமது வாழ்க்கைப் பாதையும் மழையும் பள்ளத்தாக்குகள் நிறைந்தவையாகவே இருக்கும். அது சமபூமியாக இருந்தால் சரிந்தேபோவோம். ஆம் செல்வராக இருந்தால் நாம் விண்ணரசில் நுழையும் பொழுதுஎம்மிடம் உள்ளவற்றில் சிறிதளவாவது இல்லாதவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் பொழுது எமதுவாழ்வில் பலஅதிசயங்களைகாண்போம்.